**புத்தள பிரதேச சபை**
**மொனராகலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தள பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிலையான சொத்துக் கணக்கின் மீதிக்கு, மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்பினதும், மூலதன ஈடுபடுத்தலுக்கான உதவி மூலதன பங்களிப்புக் கணக்கினதும் மீதிகளின் கூட்டுத்தொகை சமமாக இருக்க வேண்டியிருந்த போதிலும், அந்த 02 மீதிகளுக்கிடையே ரூபா 10,020,000 வேறுபாடு காணப்பட்டது. | உரிய கணக்குகளின் மீதிகள் சமமாக இருக்க வேண்டும். | 2013 இன் நிதிக் கூற்றுக்களில் வழுவாக இருந்ததுடன் 2019 இன் நிதிக்கூற்றுக்களில் நாட்குறிப்பு பதிவு மூலம் சீரமைக்கப்பட்டுள்ளது. |
| (ii) | மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 5,600,780 ஆக இருந்த போதிலும், அது ரூபா 2,675,405 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்குகள் தயாரித்ததன் பின்னர் பட்டோலை பெறப்படாமையால் வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் 2019 இன் நிதிக்கூற்றுக்களில் இலக்கம் 52 என்ற |

| | | | |
|---|---|---|---|
| | | | நாட்குறிப்பு மூலம் சீராக்கப்பட்டுள்ளது. |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 4,768,916 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,820,642 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான மீதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கணக்குகள் தயாரித்ததன் பின்னர் பட்டோலை பெறப்படாமையால் வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் 2019 இன் நிதிக்கூற்றுக்களில் இலக்கம் 52 என்ற நாட்குறிப்பு மூலம் சீராக்கப்பட்டுள்ளது. |
| (iv) | மீளாய்வாண்டின் நீதிமன்றத் தண்டப்பணம் வருமானம் ரூபா 4,130,147 ஆக இருந்த போதிலும், ரூபா 4,025,468 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்குகள் தயாரித்ததன் பின்னர் பட்டோலை பெறப்பட்டமையால் வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் 2019 இன் நிதிக்கூற்றுக்களில் இலக்கம் 52 என்ற நாட்குறிப்பு மூலம் சீராக்கப்பட்டுள்ளது. |
| (v) | மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 475,469 தொகையான மூலதன செலவினம் வருமானச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | உபகரணங்களின் செலவு பிழையாக பதியப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் சரி செய்யப்படும். |
| (vi) | சபைக்குரிய மோட்டார் கிறேடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்கியதற்காக முன்னைய ஆண்டின் போது அறவிடப்பட்ட ரூபா 253,481 தொகைக்காக மீளாய்வாண்டின் போதும் கடன்பட்டோர் நிதிஏற்பாடு ஏற்படுத்தப்பட்டமையினால் கடன்பட்டோர் அப்பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே அதற்குரிய செலவுப் பதிவு தொடர்பான விபரங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 இன் நிதிக்கூற்றில் இலக்கம் 53 என்ற நாட்குறிப்பின் மூலம் சீராக்கப்பட்டுள்ளது. |
| (vii) | மீளாய்வாண்டிற்காக ரூபா 46,475 செலவினத்திற்காக நிதிஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | தவறவிடப்பட்ட வழுவினால் கடன் கொடுத்தோர் குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 இன் நிதிக் கூற்றுக்களில் இலக்கம் 54 |

| | | | |
|---|---|---|---|
| | | | என்ற நாட்குறிப்பின் மூலம் சரி செய்யப்பட்டள்ளது. |
| (viii) | மீளாய்வாண்டின் இறுதியின் போது அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணத்திற்காக ரூபா 25,389 தொகை மேலதிகமாக கடன்கொடுத்தோர் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 இன் நிதிக்கூற்றுக்களில் இலக்கம் 55 என்ற நாட்குறிப்பின் ஊடாக சரி செய்யப்பட்டுள்ளது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும், பதிவேடுகளில் காணப்படுகின்ற தொழில் முயற்சிகள் / நிர்மாண வரி, வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் நிலுவை நீர்க்கட்டண மீதிகளுக்கிடையே ரூபா 68,054 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | பதிவேடுகள் மற்றும் பட்டோலைகள் நாளதுவரையாக்கப் பட்டு இணங்காமை களுக்கான காரணங்களைக் கண்டறிந்து சரிசெய்யப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களின் கடமை விடயங்களை மாற்றியமையினாலும், பதிவேடுகளில் வருமானம் குறிப்பிடப்படாமையினாலும் வேறுபாடு ஏற்பட்டிருந்தது. |

**(இ) கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 2,513,581 தொகையான சொத்து விடயங்களுக்குரிய காலப்பகுப்பாய்வு மற்றும் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தவேண்டிய ரூபா 17,379,437 மீதிக்குரிய மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படாமை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படுவதுடன் கோரப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் இதுவரையிலும் அனுப்பப்படவில்லை. |

### 1.4 இணங்காமைகள்

#### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 139 ஆம் பிரிவு | ஆதனவரி விதிப்பதன் கீழ் இடமொன்றின் வருடாந்த பெறுமதியை மதிப்பீடு செய்யும் வகையில் தவணை அறிக்கை கோரப்பட்டிருக்கவில்லை | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரை தவணை அறிக்கை கோரப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் கோரப்படும். |
| (ii) | 158, 162 மற்றும் 163 ஆம் பிரிவுகள் | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 2,513,581 தொகையான ஆதனவரி அறவிடப்பட்டிருக்க வில்லை. | அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019.04.30 இல் உள்ளவாறு ரூபா 374,342 தொகை அறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,208,783 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,022,021 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,219,792 | 2,231,792 | 1,294,043 | 937,749 | 2,283,220 | 2,187,505 | 1,508,723 | 678,782 |
| (ii) | வாடகை | 6,041,600 | 6,730,946 | 6,581,511 | 149,435 | 5,860,800 | 5,709,700 | 5,536,200 | 173,500 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,141,000 | 1,570,772 | 1,570,772 | - | 1,174,000 | 1,174,559 | 1,174,559 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 29,473,500 | 22,224,707 | 15,080,568 | 7,144,139 | 18,840,640 | 22,584,464 | 14,993,616 | 7,590,848 |
| | மொத்தம் | 38,875,892 | 32,758,217 | 24,526,894 | 8,231,323 | 28,158,660 | 31,656,228 | 23,213,098 | 8,443,130 |

## 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 32,758,217 தொகையான மொத்த வருமானத்தில் ஆண்டின் இறுதி வரையிலும் ரூபா 8,231,323 தொகை அறவிடப்படாதிருந்ததுடன் அது சிட்டையிடப்பட்ட மொத்த வருமானத்தில் 25 சதவீதம் ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தில் நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என ரூபா 37 இலட்சம் அறவிடுவதற்கு இருந்ததுடன் நிலுவை ஆதனவரி ஆதனங்களைத் தடை செய்து அறவிடப்படும். பெறவேண்டிய இயந்திர வாடகை ரூபா 29 இலட்சம் ஆகும். |

## 2.2.3 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனவரி அறவிடுவதற்குரிய ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்படவேண்டி இருந்த போதிலும், 2007 ஆம் ஆண்டின் பின்னர் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு ஒரு தடவை ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | 2016.07.27 ஆந் திகதி முதல் மீள் மதிப்பீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது காணப்பட்ட ரூபா 2,604,697 தொகையான நிலுவை ஆதனவரி வருமானத்தில் ஆண்டின் போது ரூபா 1,581,832 | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆதனங்களைத் தடை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், அரசாங்கத்தின் ஆதனங்கள் தொடர்பான தீர்மானத்தை |

| | | | |
|---|---|---|---|
| | தொகை அதாவது 61 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | எடுப்பதற்கு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட ரூபா 1,980,725 தொகையான ஆதனவரி வருமானத்தில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 931,749 தொகை அதாவது 47 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆதனங்களைத் தடை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், அரசாங்கத்தின் ஆதனங்கள் தொடர்பான தீர்மானத்தை எடுப்பதற்கு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.4 நீர்க்கட்டண வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாது காணப்படுகின்ற நீர்க்கட்டண வருமான மீதி ரூபா 408,099 ஆகும். | நிலுவை நீர்க் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | துண்டிக்கப்பட்டுள்ள நீர் வழங்கல்களில் ரூபா 38,000 தொகையான நிலுவையொன்று காணப்பட்டதுடன் எஞ்சிய நிலுவைப்பணம் அறவிடப்படுகின்றது. 2019.03.31 இல் உள்ளவாறு நிலுவை ரூபா 75,510 ஆகும். |

### 2.2.5 விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகாரப்பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்ட 343 விளம்பர அறிவித்தல் பதாதைகளில் இருந்து முன்னைய ஆண்டிற்காக ரூபா 410,900 தொகையும், மீளாய்வாண்டிற்காக ரூபா 2,097,931 தொகையுமாக கூட்டுமொத்தமாக ரூபா 2,508,831 தொகை அறவிடப்படவில்லை. | நிலுவை விளம்பர அறிவித்தல் பதாதைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | உரிய நிறுவனங்களுக்கு பணம் செலுத்துமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

**2.2.6 தொலைத்தொடர்பு கோபுர வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபை அதிகாரப் பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 02 நிறுவனங்களுக்குரிய தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு வருடமொன்றை விட அதிகமான நிலுவை மீதி ரூபா 141,000 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 6,000 கட்டணம் என்பன அறவிடப்படவில்லை. | நிலுவைத் தொலைத்தொடர்பு கோபுர வருமானம் அறவிடப்பட வேண்டும். | பல வருடகாலமாக காணப்படுகின்ற நிலுவையாக இருந்ததுடன் ரூபா 33,000 தொகை இதுவரையில் அறவிடப்பட்டுள்ளது. |

**2.2.7 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,997,877 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,820,642 தொகை ஆகும். | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் என்பன அறவிடப்பட வேண்டும். | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 981,640 தொகை கிடைத்திருந்ததுடன் 2018 யூலை முதல் செப்தெம்பர் வரையான மாதங்களுக்குரிய ரூபா 1,820,642 தொகையான முத்திரைக் கட்டணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பட்டோலை தயாரித்து 2019.03.08 ஆந் திகதி மாகாண இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**2.3 மிகைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் | நிலுவை மிகைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | மிகைக் கட்டணம் அறவிடல் உள்ளூராட்சித் திணைக்களத்தில் செய்யப்படுவதுடன் மிகைக் கட்டணத்தைச் |

| | | |
|---|---|---|
| 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய தொகை ரூபா 733,241 ஆகும். | | செலுத்துமாறு கட்டளை வழங்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதில் 20 விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | உப விதிகள் விதிக்கப்படாத விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | 2013.06.28 ஆந் திகதிய 1816/43 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 23 உபவிதிகளில் 21 விதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் 10 விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. |

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நான்கு வருடத் திட்டமொன்று தயாரிக்கப்படும். |

**(இ) நிறைவேற்றப்படாத இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் 24 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ரூபா 18,120,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு செயற்திட்டமும் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்படவில்லை. | வருடாந்த பாதீட்டின் மூலம் திட்டமிடப்பட்டுள்ள செயற்திட்டங்கள் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட வேண்டும். | சில வேலைகளின் செயற்பாடுகள் 2019 ஆம் அண்டின் போது நிறைவேற்றப்படும் என அறியத்தருகின்றேன். |

**(ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கைகள் 2012 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறப்பட வேண்டும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் 2019 ஆம் ஆண்டின் போது வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகளின் ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், சபைக்குரியதாக முடியமான வகையில் இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவிடுவதற்கு குறிகாட்டிகளை இனங்கண்டு அதன் பிரகாரம் வருடாந்த இலக்கு அடைதலின் முன்னேற்றம் அளவிடப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்கை இனங்காண்பதற்கு எதிர்காலத்தில் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 15 ஆந் திகதிய 2050 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் சபையினால் புத்தள, பெல்வத்த மற்றும் ஒக்கம்பிட்டிய நகரங்களில் உள்ள மோட்டார் வாகன தரிப்பிட நிலையங்களின் கட்டணத்தை அறவிடுவதற்கு பகிரங்கப்படுத்தப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகன தரிப்பிடக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | உரிய உப விதிகள் 2018 திசெம்பர் மாதம் அங்கீகரிக்கப்பட்டிருந்தடன் வர்த்தமானியில் பிரசுரித்து கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | சபைக்குரிய இயந்திர உபகரணங்களை வாடகைக்கு வழங்கியதற்காக 2010 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய மீதி ரூபா 6,589,590 ஆகும். | நிலுவை இயந்திர வாடகை அறவிடப்பட வேண்டும். | இதுவரையிலும் நிலுவை வருமானத்தில் ரூபா 5 இலட்சம் அறவிடப்பட்டுள்ளது. |
| (இ) | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்கும், ஏனைய 11 நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் 2016 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 130,721 தொகை மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய ரூபா 2,604,773 தொகையாக கூட்டுமொத்தமாக ரூபா 2,735,494 தொகையான கடன் தவணைப் பணம் மற்றும் செலுத்த வேண்டிய பணம் என்பன மீளாய்வாண்டின் போது தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் மீதியில் ரூபா 612,215 தொகை 2019 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டுள்ளது. நிலுவை வருமானத்தில் சேகரித்ததன் பின்னர் ஏனைய செலுத்துதல்கள் செய்யப்பட்டதுடன் இயந்திர உபகரணங்கள் கணக்கிற்கு பணம் கிடைத்ததும் நிலுவை தவணைப் பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) பதவியணியினர் தகவல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 03 பதவிகளுக்குரிய 07 ஊழியர்களின் மிகையும், 07 பதவிகளில் 15 ஊழியர் களின் வெற்றிடங்களும் காணப்பட்டன. | மிகைப் பதவியணியினர் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருடாந்தம் பணியிட மாற்றத்தின் காரணமாக மிகையொன்று ஏற்பட்டிருந்ததுடன் அது தொடர்பான பிரதி பிரதம செயலாளருக்கு அறிவித்து வெற்றிடம் தொடர்பாக ஒவ்வொரு மாதமும் உள்ளுராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

### (ஆ) ஊழியர் கடன்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் சேவையாற்றிய 27 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட 01 வருடத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடப்படாமல் காணப்படுகின்ற கடன் மீதி ரூபா 249,876 ஆகும். | நிலுவை ஊழியர் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | மரணப் பணிக்கொடையிலிருந்து அறவிடப்படுவதுடன் அறவிட முடியாதுள்ள மீதி தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

### (அ) வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 முதல் 2012 ஆம் ஆண்டு வரை சபைக்குரிய வாராந்த சந்தை, மாட்டிறைச்சிக் கடை, ஆட்டிறைச்சிக் கடை மற்றும் கோழி இறைச்சிக் கடை என்பவற்றை | நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டும். | 1988 - 2011 ஆண்டு காலப்பகுதிக்குரியவைகள் காலரீதியில் அறவிடப்படாமையினால் தற்போது அறவிடுதல் பிரச்சினைக்குரியதாக இருந்தது. |

| | | |
|---|---|---|
| வாடகைக்கு வழங்கியதற்காக ரூபா 1,225,279 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |

**(ஆ) அகற்றப்பட்ட கடைகளின் வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமாகக் காணப்பட்டு அகற்றப்பட்ட 14 பழைய கடைகளில் இருந்து ரூபா 190,054 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடை வாடகை அறவிடப்பட வேண்டும். | கடைகளை அகற்றுகின்ற அவசரத்தில் கடை வாடகை அறவிடப்படாமையினால் இதுவரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் புதிய கடைகளை வழங்குகின்ற போது கடை உரிமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வழக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கமநல சேவைகள் திணைக்களத்திலிருந்து 2004 பெப்ரவரி 10 ஆந் திகதி சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 300,000 பெறுமதியான சிறியளவாக உழவு இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அவ்வாறு முடியாதுவிடின் விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். | உழவு இயந்திரம் செயலிழந்து காணப்படுகின்றமையால் எதிர்காலத்தில் பழுது பார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் | சுற்றறிக்கையின் அறிவுரையின் பிரகாரம் எரிபொருள் எரிவு | எரிபொருள் எரிவுப் பரிசோதனை யூலை மாதம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 17 வாகனங்களுக்கு எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப்படவில்லை. | பரிசோதனை செய்யப்பட வேண்டும். | |

### 3.6 பெறுகைகள்

#### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டிற்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டமொன்றின் வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. |

#### 3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 36 வீதிகளை அமைப்பதற்கு சபைக்குரிய 02 மோட்டார் கிறேடர் இயந்திரங்கள் 286 மணி நேரம் ஓடியிருந்த போதிலும், இந்த வேலைக்காக மதிப்பீடு தயாரிக்கப் படாதிருந்ததுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகள் தொடர்பான விபரங்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே இந்த வேலைக்கான பூர்த்தி வேலை அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | ஒவ்வொரு வேலைகளுக்கான பொருட்கள், ஊழியம், இயந்திர மணி என்பவற்றின் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர் மேற்பார்வையின் கீழ் மேற்கொண்டு, இறுதி வேலை பூர்த்தி வேலை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பொது அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான மதிப்பீடு தயாரித்து தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் குறித்த மாதிரியில் உள்ளதா எனப் பரீட்சித்து பூர்த்தி வேலை அறிக்கை பெற்று கோவைகள் தயாரிக்கப்படுகின்றது என அறியத்தருகின்றேன். |

(ஆ) புத்தள பொது மலசல கூடத்தை திருத்தும் வேலை தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | 02 மலசலகூட கொமடுகளைப் (commode) பொருத்துவதற்காக ரூபா 26,860 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டதுடன் அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலையிலும் காணப்படவில்லை. | சரியாக மதிப்பீடு தயாரித்து, பரீட்சித்து செலுத்தப்பட வேண்டியிருந்ததுடன் சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் மீள அறவிடப்பட வேண்டும். | BSR விலை வீதத்தின் படி ரூபா 13,776 வீதமொன்று உள்ளடக்கப்பட்ட போதிலும், திறந்த சந்தையின் கூறுவிலையின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டு கொமட் பொருத்தப்பட்டுள்ளது. மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது அது கைகளால் மேற்கொள்ளப்பட்டதுடன் அது சந்தை விலையாக சரியானதாக இருக்க வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறு மதிப்பீட்டை மாற்றுதல் தனியாக சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படும். |
| (ii) | விலைப் பட்டியலின் பிரகாரம் 02 அங்கீகரிக்கப்பட்ட தரத் தன்மையில் 04 மலசலகூட பேசன்களைப் பொருத்துவதற்காக (Approved Quality Ceramic Squatiny Pan) கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவை அங்கீகரிக்கப் படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. பொருத்தப்பட்ட மலசலகூட பேசன்கள் (Squatiny Pan) அனைத்தும் உடைந்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் உரிய பணிகளின் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நிறைவேற்றப் படுகின்றதா என பரீட்சிக்க வேண்டியிருந்ததுடன் சபை நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் மீள அறவிடப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட மலசல கூட பேசன்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், பயன்படுத்தும் போது பல்வேறு நபர்களினால் முறையான பிரகாரம் பயன்படுத்தாமையினால் உடைந்திருந்தது என அறிவிக்கின்றோம். |
| (iii) | முன்னைய ஆண்டில் பொருத்தப்பட்ட ரூபா 37,073 பெறுமதியான கழுவும் அறை | பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு தேவையான | இது தொடர்பாக மிகுதி பரிசோதனைகளை மேற்கொண்டு கணக்காய்விற்கு |

| | | | |
|---|---|---|---|
| | துணைப்பாகங்கள் களவு போயிருந்தது. | நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | அறிக்கையிடுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (இ) | றத்வத்த மாவத்தையின் வீதி இரு மருங்கிலும் கிறவல் இட்டு செப்பனிடும் வேலைக்குரிய வீதி ஓரங்களை சுருக்குவதற்காக தண்ணீர் இடும்போது ரூபா 39,803 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் மீள அறவிடப்பட வேண்டும். | கிறவல் இட்டு தயாரிக்கும் போது 163.93 கனமீற்றர் தண்ணீர் இட்டு செப்பனிட வேண்டியிருந்ததுடன் அந்த நாட்களில் அதிக வறட்சி நிலவியமையால் அங்கீகரிக்கப்பட்ட அளவை விட அதிகளவான நீரை பயன்படுத்த வேண்டியிருந்தது. இது தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் குறிப்புக்கள் பெறப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் பட்டியலின் குறிப்பையும் வைத்துக் கொண்டு செலுத்துமாறு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்படும். |
| (ஈ) | சபையினால் 200 கனமீற்றருக்கு மேற்பட்ட அளவு கிறவல் இட்டு நிர்மாணிக்கப்பட்ட 08 வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய போக்குவரத்து விடயங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது 200 கனமீற்றர் கிறவல் அளவிற்கு மேல் கொடுப்பனவு அளவு வீதம் பயன்படுத்தப்படாமல் 200 கனமீற்றருக்கு குறைந்த வீதம் பயன்படுத்தப்பட்டு செலுத்தப்பட்டமையால் ரூபா 434,630 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் மீள அறவிடப்பட வேண்டும். | இந்த வேலைகளின் கிறவல் போக்குவரத்திற்காக வீதி விலைகளின் இறுதியில் குறிப்பிடப்பட்ட கூறுவிலை பயன்படுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்துடனும் செலவினத்துடனும் ஆண்டின் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் ஒப்பீடு செய்த போது 07 வருமான விடயங்களில் 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையும், 09 செலவின விடயங்களில் 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையும் முரண்கள் காணப்பட்டன. | சரியான பாதீடொன்றைத் தயாரித்து அதில் காண்பிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைய வேண்டும். | வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்பாடுகளை நடாத்திச் செல்லும் போது மாற்றமடைகின்ற புறச் சுற்றாடல் நிலைமையின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட பணியில் அந்த முறையிலேயே அமுல்படுத்த முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்ததுடன் அந்த தாக்கங்களினால் பாதீட்டு முரண்கள் ஏற்பட்டிருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. |

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(01) ஆம் இலக்க உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை தாபித்தல் வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்காக உள்ளுராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் மாவட்டத்தின் சகல உள்ளுராட்சி நிறுவனங்களையும் மேவுகை செய்யும் வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. |